# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (20.02.2016 முதல் 24.02.2016)

**அறிக்கை எண் : 015/2016** **தேதி: 19.02.2016**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 35°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 26°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 07°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டத்தை (2.9 மி.மீ மற்றும் 0.2 மி.மீ அளவு மழை கிடைத்தது) தவிர மற்ற மாநிலங்களில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (20.02.2016 முதல் 24.02.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20-02-16 | 0 | 33 | 22 | 5 | 74 | 40 | 14 | வட கிழக்கு |
| 21-02-16 | 0 | 33 | 22 | 5 | 74 | 40 | 14 | வட கிழக்கு |
| 22-02-16 | 0 | 33 | 22 | 5 | 74 | 40 | 14 | வட கிழக்கு |
| 23-02-16 | 0 | 33 | 22 | 5 | 74 | 40 | 14 | வட கிழக்கு |
| 24-02-16 | 0 | 33 | 22 | 5 | 74 | 40 | 14 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ நன்செய் மற்றும் தோட்ட நிலங்களில் வாழை நடுவதற்கு இது உகுந்த பருவமாகும். தரம் உள்ள வாழை கட்டைகளை 0.1 சதவீதம் கார்பன்டசிம் (carbendazim) கரைசலில் 5 நிமிடம் நனைத்து பின்னர் வாழை கட்டையை களிமண் கரைசலில் முக்கி, பின்பு 40 கிராம் கார்போப்யூரான் 3 ஜி (Carbofuran 3G ) குருணையை கட்டையின் மேல் தெளித்து நடவு மேற்கொள்ளவும்.
- ✓ பகல்நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் தென்னை மரத்திற்கு நாள் ஒன்றுக்கு 60 முதல் 80 லிட்டர் வரை மாலை வேளையில் சொட்டு நீர் முறையில் பாசனம் செய்யவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 14 கிலோ மீட்டர் வேகத்தில் வீசுவதால் 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 30 முதல் 35 கிராம் தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும்.
- ✓ வெப்பநிலை அதிகமாக காணப்படுவதால் கால்நடை மற்றும் கறவை மாடுகளுக்கு சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ பகல்நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் தென்னை மரத்திற்கு நாள் ஒன்றுக்கு 60 முதல் 80 லிட்டர் வரை மாலை வேளையில் சொட்டு நீர் முறையில் பாசனம் செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**